32 Regd. No. M. 2573.

# பாலவித்யா.



7 = FEB 19

2-வது ஆண்டு 1931௵ ஜனவரி௴

# பாலவித்யா.

## சந்தாதாரர்களுக்கு அறிவிப்பு.

பாலவித்யா ஜர்னலின் 1வது ஆண்டு சென்ற டிஸம்பர் மாதத்தோடு முடிவடைந்தது.

ஷை வருஷத்தில் *சபேசன் என்ற ஒரு பெரிய நாவலும், 2 சிறிய நாடகரூபமான நாவல்களும், மற்றும் சில சிறு கதைகளும், வியாஸங்களும் வெளிவரலாயிற்று.

1931 வஷத்தில் இரண்டு பெரிய நாவல்களும், இதர சிறு கதைகள், வியாஸங்களும் வெளியாகும்படி ஏற்பாடு செய்திக்கிறது.

பாலவித்யா பாரத பல நன்னோக்கங்களைக் கொண்டு ஆரம்பிக்கப் பெற்றிருக்கிறதென்பதை வேண்டுகோள் என்னும் தலைப்புப் பாடலாலே நாட்டியச் சொல்லியுள்ளோம். எந்த நோக்கமும் மக்கள் பலருடைய ஆதரவைப் பெற்றாலன்றி நாட்டிற்பரவி நன்மை பயக்கும் நிலையை அடைய முடியாது. இதனை நீவிரும் உணர்ந்தே இருப்பீர்.

ஆகவே சந்தாதாரர்கள் இந்த ஸஞ்சிகையில் சேர்க்கப்பட்டிருக்கும் ஆர்டர் பாரத்தில் கையெழுத்து செய்து அனுப்பி (V. P.ல் அனுப்பினால் 4 அணா அதிகம் சிலவாகிறபடியால்) சந்தா தொகையையும் மணியார்டர் செய்து 2வது ஆண்டுக்கு சந்தாதாரராகச் சேர்ந்துகொள்வதுடன் தங்கள் சிநேகிதர்களையும் சந்தாதாரர்களாக சேரும்படி செய்வீராயின் நம் நாட்டுக்கு எங்களை நல்ல தொண்டராக்குதலாகிய நற் காரியத்தைச் செய்தவர்கள் ஆவீர். எங்கள் தொண்டும் பல் நல்வழிகளிலே பரந்து பயன் தருவதாகும்.

“ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும்; இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்.” (கபிலர்)

பதிப்பாளர்கள்.

* 2வது ஆண்டில் சேரும் சந்தாதாரர்கள் ஷை நாவலுக்கு ஆர்டர்செய்தால் தபாற்சிலவு இல்லாமல் பெற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 1-8-0

உ

# பால வித்யா.

(மாதப் பத்திரிகை)

7 - FEB 1931

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"


| தொகுதி II | 1931ஆ ஜனவரி பிரமோதூதஆ தை | பகுதி |
|---|---|---|


ஆவணக் காப்பக நூலகம் 188778

## முருகன் புகழ்மாலை.

கூடலூர்
தமிழாசிரியர், தே. ஆ. ஸ்ரீநிவாஸன் இயற்றியது.

### காப்பு.

உருகன் படியா ருளமே வியமால்
மருகன் புடையார் வளிநாயகன் வேல்
முருகன் புகழ்பாடிட மூடிக மேல்
வருகன் றியமா முகன்றாள் சரணே.

### நூற்பயன்.

1. கந்தனைச் சிந்தியும் பந்தமும் வெந்திடும்
அந்தகன் வந்திடான் வந்துறும் முந்தவான்.

2. முருகன் அடியிணை யுருகிப் புகழுமின்
இருவல் வினைகளும் அருகித் தொலையுமே.

3. பணிமின் முருகனை எணுமின் அவன்புகழ்
பிணியுங் கெடுமுடன் றுணியும் பிறவியே.

## நூல்.

1. ஆதிபரஞ் சோதியனே யன்பர் கோவே
யாறுமுக வானந்த வமலா மெத்த
நீதிபர வெளியதனில் நிருத்த மாடும்
நிருமலனே நித்தியனே நினது தாளில்
எதுமறி யாதவொரு பேதை நாயே
னேதேதோ பிதற்றி மிக வேத்திடற்குப்
...கியுமை பாகத்தார் பரமன் றந்த
...ணவனே யருள்செய்வாய் பரிந்து நீயே.

2. வெள்ளிவரை யிருத்தியுட னமர்ந்து மெத்த
விருப்பமுட னடிபணியு மிருடி யர்க்குத்
தெள்ளறிவை மோனவட வாலின் கீழாய்த்
திருந்த வுணர்த்திடுகின்ற குருவே யாகி
எள்ளிவரு மரிசுதனை யெரிசெய் வித்தே
யிவ்வரை யுமையவளை யிட மருங்கிற்
கொள்ளவரு மெந்தைசிவன் றந்த தீயின்
குணமான பொறியாறுங் குறிக்கொள் வோமே.

3 புவனமுழு துய்யவெழு பொறிக ளாறும்
பொங்குமெரி யரியிருவர் போற்றிக் கொண்டே
புவனமுறு பனிநீரின் கங்கை சேர்க்கப்
பொய்கையெனுஞ் சரவணத்திற் புகுந்து முற்று
மவனிமுழு தாளுதல்செ யண்ண லெந்தை
யருளினு லறுமகவா யன்பு பூண்ட
சிவனிதயச் செங்கமல மலர வைக்குஞ்
செங்கதிரே சிறியனெனக் கருள்செய் வாயே.

4 கன்னியராங் கார்த்திகையா ரறுவ ரூட்டக்
கலந்துண்டு கலந்துவிளை யாடி யெந்தை
கன்னிகையங் கவுரியுடன் கயிலை விட்டுக்
கண்டங்கு களிப்பெய்த வந்த வேளை
புன்னைகொள் பூரணியாள் பொன்சேர் மேனிப்
புண்ணியநல் லறுமகவைப் புயத்த ணைக்க
இன்னகைசெய் திருமுகமா றிலங்க மேனி
யிருமூன்று மொன்றாகி யுகந்த வேளே. (தொடரும்)

ஸ்ரீ:

# பாரதக் கருப்பொருள்.

ஆசிரியர்: நா. இராமசுவாமி நாயகர்,
தமிழாசிரியர், செயிண்ட் ஜோஸப் ஸ்கூல், மஞ்சக்குப்பம்.

---

## பாயிரம்.

### காப்பு.

திருப்புணர் பாண்டவர் தெய்வ மாக்கதை
மருப்பெழுத் தாணியின் மாதவன் சொலப்
பொருப்பகந் தீட்டிய போத கத்தினைக்
கருப்பொருட் காவுளக் கந்திற் கட்டுவாம்

(பொழிப்புரை) சிறப்புப் பொருந்திய பாண்டவர்களது தெய்வத் தன்மை வாய்ந்த சிறந்த சரிதமாகிய பாரதத்தினை முன்னாள் வியாத முனிவன் சொல்லத் தனது மருப்பாகிய வெழுத்தாணிகொண்டு மேருமலையாகிய எட்டினகத்தே தீட்டியருளிய விநாயகக் கடவுளாகிய யானையை, இந்தக் கருப்பொருள் இடர்ப்பாடின்றி நடைபெறுமாறு எமது மனமாகிய கட்டுத்தறியிற் பிணிப்பாம். (1)

### கண்ணன் துதி.

பாரதன் பொறைகெடப் பண்டி ராசரைப்
பாரதன் சிலைகொடு படுக்க வோர்மொழி
பாரதன் மனங்கொளப் பகர்ந்து பாகனாய்ப்
பாரத முடித்தவன் பதங்கள் போற்றுவாம்.

(பொ-ரை) பூமியினது சுமை நீங்குமாறு பண்டு துவாபரயுக வீற்றில், அரசர்களைத் தனது கனத்த வில்லைக்கொண்டு செருக்களத்திலே அழிக்குமாறு, பார்த்தனது கலங்கிய மனம் கொள்ளும்படி ஒப்பற்ற கீதையை உபதேசித்துத் தான் அவன் தேர்ப்பாகனாகவே யிருந்து பாரதப்போரை முடித்துவைத்த கண்ணபிரானது திருவடிகளைத் துதிசெய்வாம்.

பார் + அதன்; பார + தன்; பாரதன்; பாரதம் என்று பிரியும் (2)

### நம்மாழ்வார் துதி.

மாயிரு ஞாலத்து மன்னு யிர்த்திரள்
பாயிருள் கெடுத்துயர் பரமற் சார்ந்துயத்
தாயினும் பரிவினற் றமிழ்ச்சொன் மாமறை
ஆயிர மருளினு னடிகள் சாருவாம்.

(பொ-ரை) இப்பெரிய உலகத்து நிலைபெற்ற உயிர்த்தொகுதிகள் தம் மகத்துள் பரவிய அஞ்ஞானவிருளை யொழித்துப் பரம்பொரு

ளாகிய எம்பெருமான் திருவடியடைந்து உய்வுபெறும்வண்ணம்
தாயினும் மிகுந்த அன்போடு தமிழ்ச் சொல்லாலாகிய சிறந்த வேத
சாரமாந் திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்களையும் திருவாய்மலர்ந்தரு
ளிய நம்மாழ்வாரது பாதங்களைச் சரணம் அடைவாம். (3)

### வித்யாகுருவணக்கம். (வேறு)

அவலங் கொடுவந் தடைமெய் யடியார்
பவவெங் கடறாள் படநோக் கியருள்
தவவொண் கடலாந் தகைசால் முனிவன்
சிவசண் முகதே சிகன்றா ளினைவாம்.

(பொ-ரை) வினைத்துயர் கொண்டுவந்து தன் சரணைச் சரணாக
வடைந்த மெய்யடியார்தம் பிறவிப் பெருங்கடல் நீர்வற்றித் தூர்படு
மாறு கிருபாநோக்கம் செய்தருளுகின்ற தவக்கடலாம் பெருமை மிகு
ந்த சிவசண்முகமெய்ஞ்ஞானசிவாச்சாரியசுவாமிகளது திருவடித் தாம
ரைகளை நினைவாம். (4)

### அவையடக்கம். (வேறு)

பற்றி லேனெனி னும்பட ராசையிற்
சொற்ற னன்னிதிற் சொற்பொருள் வல்லுநர்
குற்ற மோர்தல்சி றார்மணல் கொண்டட
லுற்ற சோற்றிற்கல் லாய்தலை யொக்குமே.

(பொ-ரை) யான் இப் பாரதக் கருப்பொருளியற்று மாற்றல்
நிறைந்தவனல்லனேனும் என் மனத்திடை யெழுந்த ஆசையினால்
இஃது உரைக்கலாயினேன். ஆதலின், நல்ல சொற்களையும் சிறந்த
பொருளையும் எடுத்தாளும் வன்மையுடையார் இதில் குற்றங்காணப்
புகுமது, சிறுவர் விளையாட்டாகச் சமைத்தமணற்சோற்றிடைக் கல்லா
ராயப் புகுவதை யொக்கும். (5)

பாயிரம் முற்றும்

---

## நூல்.

திருவு டன்கடற் றோன்றிய திங்களின்
மரபி னில்வரு சந்தனு மன்னவன்
கரிபு ரத்தைக் கடிநக ராக்கொடு
குருநி லத்தைச் செங்கோன்முறை காத்தனன்.

(பொ-ரை) இலக்குமியுடன், பூர்வம், பாற்கடலிற் றோன்றிய
சந்திரனது நல்ல வம்சத்தில் உதித்த சந்தனுவென்னும் அரசன்,
அத்தினபுரியைத் தலைநகராகக் கொண்டு குருக்ஷேத்திரத்தைச் செங்
கோலோச்சிக் காத்துவந்தனன். (1) (தொடரும்)

உ

ஓம் பரப்பிரும்மணே நம:

# கங்காதரன்.

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் அம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு "
" திருவின் செல்வி மருவிடும் மார்பன்
மருமலர்ப் பாதம் வணங்கி வாழ்த்துதுமே."

## அத்தியாயம் 1.

"சீச்சீ! வாயை மூடு. உன் அயோக்கியத்தனம் முழு
மையும் எனக்குத் தெரியாதென்று நினைத்துக்கொண்டிருக்
கிறாயோ? வெட்கமில்லா மிருகமே! நான் வீட்டில் இல்
லாத சமயம் பார்த்து நீ இங்கு வந்து பெண்பிள்ளைகளுடன்
அரட்டை அடிப்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இன்
னும் என் தாயாருமில்லாத சமயத்தில் நீ வந்து என் தங்
கையுடன் பேசுகிறாயாம். அடே! நீ என் வீட்டிற்கு அடிக்
கடி வருவதில் எனக்கு இஷ்டமில்லை யென்று பலதரம்
சொல்லியிருக்கிறேன். இனிமேல் எப்பொழுதாவது நான்
உன்னை இவ்வீட்டிற்குள் பார்ப்பேனாகில் உன் காலை ஒடித்து
விடுவேன்."

"ஐயா! உமக்கு இஷ்டமில்லாவிட்டால் நான் உம்
முடைய வீட்டிற்கு வருவது பிசகென்பதை ஒப்புக்
கொள்ளுகிறேன். ஆனால் இதற்காக நீர் இவ்விதம் என்னைத்
திட்டுவது அழகல்ல—"

"சீச்சீ! காலாடிப்பயலே! வாயை மூடிக்கொண்டு
வெளியே போ."

இவ்விதம் வாக்குவாதம் செய்துகொண்டிருந்த இருவர்
களில் ஒருவனுக்கு 24 வயதிருக்கலாம். அவனுடைய கண்

களில் கோபாக்னி ஜ்வலித்துக்கொண்டிருந்தது. மற்றொருவனுக்கு கிட்டத்தட்ட 21 வயதிருக்கும். அவனுடைய முகத்தில் வியக்கத்தக்க சாந்தமும் தீர்ந்த கம்பீரமும் நன்கு புலப்பட்டன. அவன், "சரி ; நாம் மேலும் இங்கு தாமதித்தால் வீண் வம்பாய் முடியும்." என்று தன்னுள் சிந்தித்தவனாய், திரும்பி பக்கத்திலிருந்த ஒரு அறையின் மறைவில் நின்றுகொண்டிருந்த சுமார் 15 வயதுள்ள ஒரு மங்கையை ஒருதரம் பிரியத்துடன் நோக்கிவிட்டு, மடமடவென்று வெளியே போய்விட்டான். அவன் சென்றதும் நாம் சொன்ன 24 வயதுள்ளவன் அப்பெண்மணி நின்றுகொண்டிருந்த அறைக்குள் நுழைந்து, அவளை ரௌத்திராகாரத்துடன் நோக்கியவாறு கொஞ்சநேரம் நின்றுவிட்டு, பிறகு திரும்பி, மற்றொரு மூலையில் நின்றுகொண்டிருந்த சுமார் 50 வயதுள்ள ஒரு அமங்கலி மாதை நோக்கி,

"அம்மா! நீ இப்படி இந்தப் பயலுக்கு இவ்வளவு இடம் கொடுப்பது சரியல்ல. ஸரஸ்வதியை நீ இவனுக்குக் கொடுக்கவேண்டுமென்று ஆசைப்படுகிறாயென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் அது முடியாத கார்யம். அவளை வக்கீல் கிருஷ்ணய்யருக்குத்தான் கொடுப்பதென்று நான் நிச்சயித்துவிட்டேன். அவருக்கு இவ்விதம் இந்தப் பயல் இங்கு வந்து வட்டமிடுகிறானென்பது தெரிந்துவிட்டால் வம்பாய் முடியும். சரி; நாழியாய்விட்டது. ரயிலுக்குக் கிளம்பு." என்று கூறவே, அம்மாது, தாழ்ந்த குரலில்,

"அப்பா! வக்கீல் கிருஷ்ணய்யருக்கு வயது 50க்கு மேல் இருக்குமே. அவருக்குக் கொடுப்பதைக்காட்டிலும் குழந்தையை கிணற்றில்—" என்று மேலே பேசுமுன், குருஸ்வாமி எனப் பெயர்கொண்ட அவளுடைய புதல்வன், கோபத்துடன்,

"சரி சரி; வாயை மூடு. அடியே! இப்பொழுதே சொல்லிவிட்டேன். இக்கார்யத்தில் என் இஷ்டத்திற்கு விரோதமாக நீ செய்ய உத்தேசித்திருந்தால் இதே நிமி



ஷம் உன் குழந்தையை அழைத்துக்கொண்டு வெளியே போய்விடு. அதிருக்கட்டும். நீ ரயிலுக்குப் போகப் போகிறாயா இல்லையா?" என்று கேட்க, அம்மாது, விசனத்துடன்,

"போகாமல் என்ன பண்ணுகிறது? போய் வண்டி கொண்டுவா." என்றாள். குருஸ்வாமி, சிறிதும் மரியாதையின்றி,

"வண்டி வேண்டுமோ? இதோ இருக்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கு நடந்து போக முடியாதோ?" என்று கேட்க, அம்மாது,

"அதற்காக நான் சொல்லவில்லை. மழை வரும்போலிருக்கிறதே என்று சொன்னேன். சரி; ரயிலுக்கு நாழியாய்விட்டதா?" என்று வினவினாள்.

"அதான் ஆய்விட்டது என்று சொன்னேனே. உடனே புறப்படு." என்று குருஸ்வாமி துரிதப்படுத்தவே, அவனுடைய தாயார், விசித்து விசித்து அழுதவண்ணம் நின்றுகொண்டிருந்த தன் பெண்ணை நோக்கி,

"அம்மா! ஜாக்கிரதையாயிரு. நாளை காலைவண்டியில் வந்துவிடுகிறேன்." என்று கூறிவிட்டு அவ்வறையைவிட்டு வெளியே சென்றாள். உடனே குருஸ்வாமி, அப்பெண்மணியை நோக்கி,

"ஏண்டி! நான் திரும்பி வரும்வரையில் நீ ஆத்தில் தனியாயிருப்பாயா? ஆமாம்; மறந்தே போய்விட்டேனே. உன்னைத் தனிமையில் நான் விட்டுவிட்டுப் போனால், அந்தப் பயல் உன்னுடன் ஸரஸ ஸல்லாபம் செய்ய வந்துவிடுவானே. ஏண்டி! வெட்கங்கெட்ட நாயே! அவனுடன் பேச உனக்கு கூச்சமாயில்லையா? இருக்கட்டும்." என்று திரும்பி, தன் தாயாரை நோக்கி, "அம்மா! நாகு எங்கே?" என்று வினவ, அந்தம்மாள்,

"கொல்லையில் பத்துத் தேய்த்துக்கொண்டிருக்கிறாள்." என்று விடையளித்தாள்.

உடனே குருஸ்வாமி, கொல்லைப்பக்கம் சென்று, அங்கு பத்துத் தேய்த்துக்கொண்டிருந்த தன்வீட்டு வேலைக்காரி நாகுவை நோக்கி,

“அடியே! நான் அம்மாளை ரயிலில் ஏற்றிவிட்டு வருகிறேன். நான் திரும்பி வரும்வரையில் நீ உன் வீட்டிற்குப் போகவேண்டாம்.” என்று கூறினான். நாகு சம்மதிக்கவே, குருஸ்வாமி முன்கட்டிற்குச் சென்று, தன் தாயாரை அழைத்துக்கொண்டு, வெளியே போய்விட்டான்.

அவர்கள் சென்றதும், ஸரஸ்வதி, “சரி; என்னை அந்தப் பழிகாரனுக்குத்தான் கொடுப்பதென்று என் தமயன் தீர்மானித்துவிட்டான். இனி நான் உயிருடன் இருப்பது பிசகு.” என்று தீர்மானித்தவளாய் அவ்வறையைவிட்டு வெளியே சென்று, கூடத்திலிருந்த ஒரு அலமாரியைத் திறந்து, அதிலிருந்து ஒரு கடிதத்தாளையும் பென்ஸிலையும் எடுத்து ஒரு கடிதம் எழுதிமுடித்தாள். பிறகு அதை மடித்து எடுத்துக்கொண்டு, கொல்லைப்பக்கம் சென்று அங்கிருந்த வேலைக்காரியை நோக்கி,

“நாகு! உன் வேலை ஆய்விட்டதோ?” என்று வினவினாள். நாகு ஆய்விட்டதென்று விடையளிக்கவே, ஸரஸ்வதி அக்கடிதத்தை அவளிடம் கொடுத்து,

“இதை உடனே சென்று அவரிடம் கொடுத்துவிட்டு வா.” என்று கூறியதும், நாகு துரிதமாய் வெளியே சென்றாள். அவள் அக்கடிதத்தை யாரிடம் கொடுக்கவேண்டுமென்று கேட்காததிலிருந்து அவளுக்கு அது யாரென்பது தெரியுமென்று தோன்றியது. வெளியே சென்றவள், கால்மணி நேரத்திற்குள் திரும்பிவந்து,

“அவர் வீட்டிலில்லை. கடிதத்தை என் தங்கச்சியிடம் கொடுத்து, அவர் வந்ததும் கொடுக்கும்படி சொல்லிவிட்டேன்.” என்று கூறிக்கொண்டிருக்கையில், சுமார் 60 வயதுள்ள ஒரு பிராமணக் கிழவி, அவ்வீட்டிற்குள் ஓடிவந்து, மிகவும் பரிதாபகரமான குரலில்,



“ஸரஸ்வதி! உன் தமயன் எங்கே? இருந்தால் ஓடிப்போய் டாக்டர் கோபாலய்யரை அழைத்துக்கொண்டு வரச்சொல்லு. பார்வதிக்கு உடம்பு அதிகமாய்விட்டது. கால் ஜில்லிட்டுப் போய்விட்டது.” என்று கூறவே, ஸரஸ்வதி, திகைப்புற்று,

“அடாடா! அண்ணா ஆத்தில் இல்லையே.” என்று விடையளித்தாள். உடனே அக்கிழவி,

“ஐயோ! நான் என்ன செய்வேன்? சரி; வேறு யாரையாவது அனுப்புகிறேன்.” என்று சொல்லிக்கொண்டே, வெளியே ஓடினாள். அவள் சென்றதும், ஸரஸ்வதி, நாகுவை நோக்கி,

“அடியே! அடுத்த வீட்டிலிருக்கும் என் தோழி சாகக்கிடக்கிறாளாம். நீ கொஞ்சநேரம் வீட்டைப் பார்த்துக்கொள். நான் போய்ப் பார்த்துவிட்டு சீக்கிரம் வந்துவிடுகிறேன். நான் வர நாழியாய்விட்டால் ஒரு விளக்கைக் கொளுத்தி கூடத்தில் வை.” என்று கூறிவிட்டு, வெளியே ஓடினாள். அச்சமயம் மாலை சுமார் 6 மணி இருக்கும்.

இங்கு, ஸரஸ்வதியின் குடும்பத்தைப்பற்றிக் கொஞ்சம் விபரமாய்ச் சொல்லவேண்டியது அவசியம். அவளுடைய தந்தையாகிய மகாதேவய்யர் நாம் சொல்லும் சமயம் இறந்து மூன்று வருஷகாலமிருக்கும். அவர் இறந்ததுமுதற்கொண்டே, குருஸ்வாமியின் தாயார், தன் பெண்ணுக்கு சீக்கிரம் விவாஹம் செய்துவிட வேண்டுமென்று நினைத்து, தன் பிள்ளையிடம் பலதரம் சொல்லியும், குருஸ்வாமி அவ்விஷயத்தில் சிறிதும் சிரத்தை எடுத்துக்கொள்ளாமலிருந்துவிட்டான். ஆனால் அவன், தன் தங்கையின் விவாஹத்தின் பொருட்டு, மிகவும் சிரமப்படவேண்டிய அவசியமே இல்லாமலிருந்தது. ஏனெனில் சகல நற்குணங்களும், வியக்கத்தக்க ரூபலாவண்யமும் வாய்ந்த நம் ஸரஸ்வதியை விவாஹம் செய்துகொள்ள, பல பணக்கார வாலிபர்கள் தயாராயிருந்தனர். அப்படியிருந்தும், குருஸ்வாமி தன் தங்கையை அவர்களில் ஒருவனுக்கும் விவாஹம் செய்து

கொடுக்க இஷ்டப்படவில்லை. அப்படி அவன் இருந்ததற்குக் காரணம் அவனுடைய நீச சுபாவமும், தன் தங்கையின் விவாஹத்தின் பலனாய் தான் நல்ல லாபமடையவேண்டுமென்று அவன் மனதிலிருந்த ஒரு கெட்ட எண்ணமுமே. "ஹே தெய்வமே! எனக்கு ஒரு பெண் கிடைக்க மாட்டாளா?" என்று ஏங்கிக்கொண்டிருக்கும் ஒரு வெட்கமற்ற கிழவனுக்கு, அவளை தான் கொடுக்கும்பக்ஷத்தில் அக்கிழவனிடமிருந்து தான் பெருந்தொகை பணம் பறித்துக்கொள்ளலாமென்று அவன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். கடைசியில் அவன் நினைத்ததுபோலவே, அதே ஊரிலிருந்த கிருஷ்ணய்யர் என்ற ஒரு வக்கீல், தன் 55வது வயதில் மறுவிவாஹம் செய்துகொள்ளப் பிரியப்பட்டு, ஸரஸ்வதியின் அழகைக் கண்டு மயங்கி, தன் எண்ணத்தை குருஸ்வாமியிடம் வெளியிடவே, குருஸ்வாமி, அவர் எல்லாச் சிலவையும் ஒப்புக்கொள்ளுவதுமன்றி, தனக்கு ரூ 2500 கொடுப்பதாயிருந்தால், தன் தங்கையைக் கொடுக்க முடியுமென்று கூறவே, கேவலம் மிருகமென்றே சொல்லத்தக்க அச்சண்டாளன் (கிருஷ்ணய்யர்) அதற்கு சம்மதித்தான். ஆனால் அதில் குருஸ்வாமியின் தாயாருக்குச் சிறிதும் இஷ்டமில்லை. நிற்க, இப்பொழுது ஸரஸ்வதியின் மனோநிலைமையைக் கவனிப்போம். அவளுக்கு ஏற்கனவே வயது 15 இருக்குமென்று சொல்லிவிட்டோம். ஆகவே, அவளுக்கும் வக்கீல் கிருஷ்ணய்யரை விவாஹம் செய்துகொள்ளுவதில் கிஞ்சித்தும் இஷ்டமில்லை என்பதை நாம் சொல்லவேண்டியது அனாவசியம். இதுவுமன்றி, அப்பெண்பாவை, ஏற்கனவே ஒரு வாலிபன்மீது காதல்கொண்டு, அவனைத் தவிர வேறு ஒருவரையும் தான் விவாஹம் செய்துகொள்ளுவதில்லை என்றும், அப்படியே தன் தமயன் தன்னை வேறு யாரையாவது விவாஹம் செய்துகொள்ளுமாறு பலவந்தம் செய்யும்பக்ஷத்தில் அவ்விவாஹத்திற்கு முன் தான் தற்கொலை செய்துகொண்டுவிடுவதென்றும் தீர்மானித்திருந்தாள். அவ்விதம் தன் பெண் அவ்வாலிபனை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாளென்ற விஷ



யம் அவளுடைய தாயாருக்கும் தெரியும். அம்மாது, அவ்வாலிபனையே நேரில் கேட்டு, அவனும் தன் புதல்வியை மணந்துகொள்ள பிரியப்படுகிறானென்பதையும் தெரிந்துகொண்டிருந்தாளாகையால், எப்படியாவது அவளை அவ்வாலிபனுக்கே கொடுத்துவிடவேண்டுமென்று தீர்மானித்திருந்தாள்.

இப்பொழுது ஸரஸ்வதி காதலித்த வாலிபன் யாரெனக் கவனிப்போம்.

கங்காதரன் எனப் பெயர்கொண்ட அவ்வாலிபனுக்கு தற்சமயம் சுமார் 21 வயதிருக்கும். அவனுடைய தந்தையாகிய கல்யாணராமய்யர் நம் கதை நடக்கும் இடமாகிய வஸந்தபுரியில் மிகவும் கியாதிபெற்ற ஒரு வக்கீலாயிருந்தார். நாம் சொல்லும் சமயம் அவர் இறந்து கிட்டத்தட்ட 5 வருஷகாலமிருக்கும். அவருக்கு, கங்காதரனைத் தவிர, கோபாலன் எனப் பெயர்கொண்ட மற்றொரு புதல்வனும் உண்டு. அவ்வாலிபனுக்கு தற்சமயம் 23 வயதிருக்கலாம். அவனுக்கு ஏற்கனவே விவாஹமாய்விட்டது. அவன் தன் 20வது வயதிலேயே படிப்பை நிறுத்திவிட்டு தன் தந்தை வைத்துச்சென்ற ஏராளமான ஐவேஜியைக் கொண்டு சுகஜீவனம் செய்துகொண்டிருந்தான். அவன், தன் தந்தை இறந்ததும், தங்களுக்குள்ள பூஸ்திதியையும் கவனித்துக்கொள்ள சாமார்த்தியமின்றி, ராமானுஜய்யங்கார் என்ற ஒரு வைஷ்ணவ பிராமணனை கார்யஸ்தராக நியமித்து, அவரையே எல்லாவற்றிற்கும் நம்பியிருந்தான். கோபாலனுடைய தம்பி கங்காதரனுக்கு, ராமானுஜய்யங்கார் மகா தந்திரசாலியென்றும், பணப்பேய் பிடித்தவரென்றும் நன்றாய்த் தெரியும். ஆனாலும் கோபாலன் அவரைத் தன் குலதெய்வமென்றே நினைத்துவந்தானாகையால், அவனை உத்தேசித்து கங்காதரன் அந்த வைஷ்ணவ பிராமணனுடைய அட்டஹாஸத்தை சகித்துக்கொண்டிருந்தான். கங்காதரனுக்கு தன் தமயனிடம் அளவற்ற பிரியமும் மரியாதையும் உண்டு. கங்காதரன், ஏற்கனவே

பீ.ஏ. பரீக்ஷையில் தேறிவிட்டு, மேலும் வக்கீல் பரீக்ஷைக்கு வாசிக்கும் எண்ணத்துடன் இருந்தான். அவனுடைய பாகத்திற்குமட்டும் இரண்டு லக்ஷத்துக்குமேல் ஐவேஜி இருந்தும், அவ்வாலிபனிடம் சாதாரணமாய் பணக்காரர்களிடம் காணக்கூடிய மமதை, அகம்பாவம், படாடோபம் இத்தகைய துர்க்குணங்கள் சிறிதும் கிடையா.

நிற்க, கங்காதரன் தன் 12வது பிராயத்திலிருந்து 18வது வயதுவரையில் அச்சமயம் வஸந்தபுரியிலேயே ஒரு ஹைஸ்கூலில் உபாத்தியாயராயிருந்த நம் ஸரஸ்வதியின் தந்தை மகாதேவய்யருடைய வீட்டிற்கு தினந்தோறும் சென்று படிப்பு கற்றுக்கொள்ளுவது வழக்கம். ஆகவே, அவ்வாலிபன் சிறுவயதிலிருந்தே அடிக்கடி ஸரஸ்வதியைப் பார்க்கவும் அதன் பலனாய் அவளுடைய நற்குணங்களைத் தெரிந்துகொள்ளவும் ஸந்தர்ப்ப மேற்பட்டது. வரவர, அவர்களுள் ஒருவித அன்பு ஜனித்து, அது தற்சமயம் காதலாக மாறியிருந்தது. ஸரஸ்வதியின் தந்தை இறந்த பிறகும் கங்காதரன் அடிக்கடி அவளுடைய வீட்டிற்குப் போவதுண்டு. கடைசியில், ஒருமாதகாலத்திற்குமுன், ஸரஸ்வதியின் தாயார் தன் பெண்ணை விவாஹம் செய்துகொள்ள அவனுக்கு இஷ்டமுண்டாவென்று அவனை நேரில் கேட்கவே, அவன் இஷ்டமுண்டென்று ஒப்புக்கொண்டான். ஆனால் அவன் அவ்விதம் அடிக்கடி தன் வீட்டிற்கு வருவதிலும், தன் தங்கையை விவாஹம் செய்துகொள்ளுவதிலும், ஸரஸ்வதியின் தமயன் குருஸ்வாமிக்கு இஷ்டமில்லை யென்பதும், இன்னும் அவன் இஷ்டப்படாததற்குக் காரணமென்னவென்பதும், நம் நேயர்கள் அறிந்த விஷயம். இவ்வத்தியாயத்தின் ஆரம்பத்தில் நாம் கூறியதுபோல், குருஸ்வாமி தன் வாயில் வந்தபடியெல்லாம் திட்டி அவமானப் படுத்தியது நம் கங்காதரனையே.

கங்காதரனுடைய வீடு சந்நியாசித்தெருவிலும், குருஸ்வாமியின் வீடு பட்டாபிஜோஸியர் தெருவிலும் இருந்தன.

இனி நம் கதையைக் கவனிப்போம்.



தன் வீட்டில் நாகுவைக் காவல் வைத்துவிட்டு வெளியே சென்ற ஸரஸ்வதி, அடுத்தவீட்டிற்குள் நுழைந்தபொழுது, அதன் கூடத்தில் போடப்பட்டிருந்த ஒரு கட்டிலைச்சுற்றி பத்துப் பதினைந்து ஸ்திரீகளும் எழெட்டு புருஷர்களும் நின்றுகொண்டு வாயில் வந்தபடியெல்லாம் புலம்பிக்கொண்டிருந்தனர். கட்டிலில் கிடந்த ஸரஸ்வதியின் தோழி மரணாவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தாள். அக்காக்ஷியைக் கண்டதும் ஸரஸ்வதியின் கண்களில் நீர் தளும்பியது. உடனே அவளும் தேம்பித் தேம்பி அழவாரம்பித்தாள். அரைமணி நேரத்திற்கெல்லாம் வந்த டாக்டர் கோபாலய்யர் பார்வதியை நன்றாய்க் கவனித்துப் பார்த்துவிட்டு, அவள் மேலும் இரண்டுமணி சாவகாசம்தான் ஜீவித்திருப்பாளென்று கூறிவிட்டுப் போய்விட்டார். இதை அறிந்ததும், பார்வதியின் பந்துஜனங்கள் அனைவரும் அழவாரம்பித்துவிட்டனர். அப்பெண் அந்த நிலைமையிலிருக்கும்பொழுது, அவளை விட்டுப்போக மனமில்லாமல் எல்லோரும் தயங்கியவாறு நின்றுகொண்டிருந்தார்கள். நம் ஸரஸ்வதியும், தன் தமயன் ஸ்டேஷனிலிருந்து திரும்பி வந்துவிடுவானென்பதை மறந்து, தன் தோழியை உற்று நோக்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தாள். கடைசியில், அக்கூட்டத்திலிருந்த ஒருவர் மணி $7\frac{1}{2}$ ஆய்விட்டதென்று கூறவே, ஸரஸ்வதி திடுக்கிட்டவளாய் அவ்விடத்தைவிட்டு வெளியே ஓடினாள்.

இதற்குள், முக்கால்மணிநேரத்திற்குமுன், ஆரம்பித்த மழை 'ஹோ' என்ற ஆரவாரத்துடனும் பயங்கரமான இடி மின்னல்களுடனும் பெய்துகொண்டிருந்தது. ரோடு முழுமையும் ஜலம் பிரவாகமாய் ஓடிக்கொண்டிருந்தது. ஸரஸ்வதி, தன் தமயன் ஏற்கனவே வந்திருப்பானென்றும், அவன் தன்னைக் கண்டதும் திட்டவாரம்பிப்பானென்றும், பயந்தவளாய் தன் வீட்டிற்குள் நுழைந்ததும் திடுக்கிட்டாள். ஏனெனில், தான் வர நேரமாய்விட்டால், விளக்கைக் கொளுத்துமாறு அவள் வேலைக்காரி நாகுவிடம் கூறியிருந்தும், அவ்வீடுமுழுமையும் இருள் சூழ்ந்துகொண்டிருந்

தது. இதுவுமன்றி, அவள் "அடி நாகு! நாகு!" என்று பலதரம் உரத்த குரலில் அழைத்தும், நாகுவிடமிருந்து பதிலில்லை. ஒன்றும் புரியாமல் திகைப்புற்றவளாய், பதறும் ஹிருதயத்துடன், விளக்கையும் நெருப்புப்பெட்டியையும் தேடியெடுத்து, விளக்கைக் கொளுத்திக்கொண்டு ஒருதரம் நாலாபக்கங்களையும் கவனித்தாள். மறுநிமிஷம், தன் வாயைத்திறந்து "ஐயோ!" என்று கூச்சலிடவும் சக்தியற்றவளாய், அப்படியே சிலைபோல் நின்றாள். உடனே அவளுடைய முகம் வெளுத்து விகாரமடைந்தது.

---

## அத்தியாயம் 2.

அதே இரவு சுமார் $8\frac{1}{2}$ மணி இருக்கும்.

அச்சமயம் வஸந்தபுரி பக்திவிலாஸ அக்கிரஹாரத்தில் ஒரு வீட்டின் மாடியில் சுமார் 23 வயதுள்ள ஒரு வாலிபன், சிந்தசாகரத்தில் மூழ்கியவனாய், மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தான். நடுவில் ஒருதரம் நடப்பதை நிறுத்திவிட்டு, "இருக்கட்டும்; நான் அவளை விவாஹம் செய்துகொள்ளமுடியாமற்போகுமாகில், இந்தப் பயல் கங்காதரனும் அவளை விவாஹம் செய்துகொள்ளக்கூடாது. நான் மட்டும் எப்படியாவது, அவனை (கங்காதரனை) அயோக்கியனென்று ரூபிக்கக்கூடுமானால், அந்தக் குட்டி என்னை விவாஹம் செய்துகொள்ள சம்மதிப்பாளென்பது நிச்சயம். இருக்கட்டும்." என்று தன் வாயைவிட்டுக் கூறினான். பிறகு மறுபடியும் உலாவ ஆரம்பித்தான்.

இப்பொழுது இவ்வாலிபன் யாரெனப் பார்ப்போம். கணபதி எனப் பெயர்கொண்ட இவனுடைய பெற்றோர்கள் இறந்து வெகுகாலமிருக்கும். கணபதிக்கு தன் தந்தையால் வைக்கப்பட்ட சொத்து சிறிதுமில்லை. ஆனாலும் அவனுடைய மாமன் ஒருவர், தன் தங்கையை உத்தேசித்து, அவனை மிகவும் பிரியத்துடன் வளர்த்துவந்தார். தன் 20 வது வயதில் கணபதி மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறவே, அச்சமயம் மாதவபுரியில் உத்தியோகத்திலிருந்த அவனுடைய மாமன், அவனை மேலும் படிக்கும்பொருட்டு வஸந்தபுரி காலேஜில் சேர்த்துவைத்தார். ஆனால் கணபதி தன் படிப்பில் சிறிதும் சிரத்தையின்றி, பல காலாடிகளுடன் சேர்ந்துகொண்டு, சூதாட்டம் முதலிய துன்மார்க்கங்களில் பிரவேசித்து, தன் நிலைமையை உணராமல் அட்டஹாஸம் செய்துகொண்டிருந்தான். நாம் சொன்ன அவ்வீட்டின் மாடியில் ஒரு அறையை எடுத்துக்கொண்டு அதில் தினந்தோறும் அவன் ரங்காடுவது வழக்கம். இந்த சூதாட்டத்தின் பலனாய் அவனுக்குள்ள பல தோழர்களில் நம் ஸரஸ்வதியின் தமயன் குருஸ்வாமி ஒருவன். ஆகவே, அவனும் அடிக்கடி குருஸ்வாமியின் வீட்டிற்குப் போவதுண்டு. அவன் முதல்தரம் ஸரஸ்வதியைப் பார்த்ததுமே, அவளுடைய அழகைக் கண்டு மயங்கி, எப்படியாவது அவளைத் தான் விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்தான். எனவே, அப்பெண்மணி நம் கங்காதரனை விவாஹம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாளென்பதை அறிந்ததும், அயோக்கிய சிகாமணியாகிய கணபதிக்கு கங்காதரன்மீது உண்டான பொறாமை அளவற்றது. சிறக, கணபதியின் தந்தை எவ்விதத்திலோ கங்காதரனுடைய தாயாருக்கு பந்துவாகையால், அந்த பாத்தியத்தைக்கொண்டு அவன் அடிக்கடி கங்காதரனுடைய வீட்டிற்கும் போவதுண்டு. அவன் மகா தந்திரசாலியாகையாலும், அவன் தன் பந்து என்ற காரணத்தாலும், மகா உத்தமியாகிய கங்காதரனுடைய தாயார் அவனை மிகவும் பிரியத்துடன் நடத்திவந்தாள்.

நாம் சொன்னதுபோல் மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்த கணபதி, சற்றுநேரத்திற்கெல்லாம் "என்ன! இன்னும் அவர்கள் வரவில்லை! சரி; நாம் தயாராயிருப்போம்." என்று கூறியவண்ணம் ஒரு மூலையில் கிடந்த ஓர் ஜமக்காளத்தை எடுத்து அவ்வறையின் நடுவில் பிரித்துப் போட்டுவிட்டு, தன் பெட்டியைத் திறந்து ஒரு புதிய சீட்டுக்கட்டை எடுத்துக்கொண்டிருக்கையில், சிலர் உரத்த குர

வில் குதூகலத்துடன் பேசிக்கொண்டே அவ்வீட்டை நோக்கி வரும் சப்தம் கேட்டது. உடனே கணபதி "பேஷ்! அதோ வந்துவிட்டார்கள்." என்று சொல்லிக்கொண்டே கீழே ஓடினான். (அச்சமயம் அவ்வீட்டின் கீழ்பாகம் குடியின்றி காலியாயிருந்தது.) கணபதி தாளிடப்பட்டிருந்த வாசற்கதவைத் திறந்ததும் வீதியில் நின்றுகொண்டிருந்த நால்வரில் ஒருவன்,

"ஏண்டா கணபதி! உனக்கு சமாசாரம் இன்னும் தெரியுமோ தெரியாதோ?" என்று வினவ, கணபதி, வியப்புற்று,

"என்ன சமாசாரம்? எனக்கொன்றும் தெரியாதே." என்றான். உடனே, முதலில் பேசியவன்,

"அப்படியா? நம்முடைய சிநேகிதன் குருஸ்வாமியை அந்தப் பயல் கங்காதரன் கொலைசெய்துவிட்டான்." என்று கூறவே, கணபதி தன் செவிகளையே நம்பாதவன் போல் காணப்பட்டான். அவன், கொஞ்சநேரம் அசைவின்றி பேசவும் சக்தியற்று நின்றுவிட்டு பிறகு,

"என்ன அநியாயம்? ஆமாம்; அவனைக் கொன்றது கங்காதரன்தான் என்பது உனக்கெப்படித் தெரியும்?" என்று வினவினான். அவனுடைய தோழன்,

"அதை அவனே ஒப்புக்கொண்டு போலீஸாருக்கு ஒரு கடிதம் எழுதி, அதை சவத்தின் பக்கத்தில் வைத்திருக்கிறான். சரி; அதைப்பற்றி நமக்கென்ன கவலை? வா; நம்முடைய கார்யத்தைப் பார்ப்போம்" என்று சொல்லவே, கணபதி,

"இன்று ஆட்டம் கிடையாது. நீ சொல்லும் விஷயம் நம்பத்தக்கதாயில்லை. நானே நேரில் போய்ப் பார்க்கிறேன்." என்றான். உடனே அவனுடைய தோழன்,

"நீ போவதில் பிரயோஜனமில்லை. அவ்வீட்டு வாசலில் இருக்கும் போலீஸ்காரர்கள் உன்னை உள்ளே விடமாட்டார்கள்." என்று கூறவே, கணபதி,



"போடா போ; எனக்குத் தெரியாத போலீஸ்காரனா? ஆமாம்; கங்காதரனைப் பிடித்துவிட்டார்களா?" என்று வினவினான். அவனுடைய நண்பன்,

"இல்லை. அவன் கம்பி நீட்டிவிட்டான். சரி; ஆனால் இன்று ஆட்டம் இல்லையா?" என்று விசனத்துடன் கேட்க, கணபதி,

"கிடையாது. இருங்கள். இதோ வந்துவிட்டேன்." என்று கூறிக்கொண்டே, ஓடிச்சென்று ஒரு பூட்டைக் கொண்டுவந்து, வாசற்கதவைப் பூட்டிவிட்டு,

"வாருங்கள் போவோம்." என்றான். ஆனால் அவனுடைய தோழர்கள், ஒரே வாக்காய்,

"அவசரமாயிருந்தால் நீ போ. நாங்கள் கொஞ்ச நேரம் காவேரி மணலில் உட்கார்ந்துகொண்டிருக்கப்போகிறோம்." என்று கூறவே, கணபதி தனியே சென்றான்.

கால்மணி நேரத்திற்கெல்லாம், கணபதி பட்டாபிஜோஸியர் தெருவை யடைந்து, குருஸ்வாமியுடைய வீட்டின் சமீபம் வந்தபொழுது, அதற்கெதிரில் ஜனங்கள் ஏராளமாய்க் கூடியிருப்பதையும், சில போலீஸ் சேவகர்கள் அக்கூட்டத்தைக் கலைக்க பிரயத்தனப்பட்டுக்கொண்டிருப்பதையும் கண்டான். அவன், தன் தோழர்களிடம் "எனக்குத் தெரியாத போலீஸ்காரனா?" என்று கூறியபோதிலும், அவ்வீட்டின் சமீபம் வந்ததும், தான் அதற்குள் நுழைவது முடியாத கார்யமென உணர்ந்து, "சரி; கங்காதரன் வீட்டிற்குப்போய் அங்கு என்ன நடக்கிறதென்று பார்ப்போம்" என்று தீர்மானித்து, சந்நியாசித்தெருவை நோக்கி நடந்தான்.

கணபதி கங்காதரனுடைய வீட்டிற்குச் சென்றபொழுது அங்கு ஒரே குழப்பமாயிருந்தது. அவ்வீட்டு வேலைக்காரர்களில் சிலர் வாயில் வந்தபடியெல்லாம் புலம்பிக்கொண்டிருந்தனர். தவிர, கங்காதரனுடைய தாயார் திடீரென்று சித்தஸ்வாதீனம் இழந்தவள்போல் காணப்பட்டாள்.

அவளைச் சூழ்ந்து பலர் உட்கார்ந்துகொண்டு பலவிதங்களில் அவளைச் சமாதானப்படுத்திக்கொண்டிருந்தனர். அவர்கள் மத்தியில் கங்காதரனுடைய தமயன் கோபாலன் காணப்படவில்லை. நிற்க, உள்ளே நுழைந்த கணபதி, கங்காதரனுடைய தாயாரையும் அவளைச் சூழ்ந்துகொண்டிருந்தவர்களையும் பார்த்ததும், "இப்பொழுது நான் இவளைப் பார்க்கவேண்டியது அனுவசியம். ஆமாம்; கோபாலன் எங்கே? ஒருக்கால் மாடியில் தன் அறையில் இருப்பானோ? போய்ப் பார்ப்போம்." என்று தீர்மானித்தவனாய், மாடிக்குச் சென்று பார்த்தபொழுது, அவன் எதிர்பார்த்தது போலவே, கோபாலன் அவனுடைய அறையில் ஒரு மேஜையின் எதிரில் தன் சிரத்தைத் தன் கரங்களால் பற்றிய வண்ணம் உட்கார்ந்துகொண்டு அம்மேஜையின்மீது கிடந்த ஒரு கடிதத்தை மிகவும் ஊக்கத்துடன் வாசித்துக்கொண்டிருப்பதைக் கண்டான். அச்சமயம் அவ்வாலிபனுடைய நிலைமையும் மிகவும் பரிதாபகரமாயிருந்தது. அவனுடைய முகம் கவலையாலும் பீதியாலும் வெளுத்து அவன் கோபாலன் தானோ எனச் சந்தேகிக்கத்தக்கவிதம் மாறியிருந்தது. உள்ளே நுழைந்த கணபதி, அன்பொழுகும் குரலில்,

"கோபாலா! நீ இவ்விதம் அதைரியப்படுவது சரியல்ல. நம்முடைய குடும்பத்தில் பிறந்த கங்காதரன் இப்படிச் செய்வானென்று நான் நம்பவேயில்லை. இப்பொழுது கூட, அவன் இதைச் செய்திருப்பானென்று எனக்குத் தோன்றவில்லை. இதில் ஏதோ மர்மம் இருக்கவேண்டும். அதை நாம் கண்டுபிடித்து, கங்காதரன் நிரபராதியென்று சீக்கிரம் ரூபிக்கப் பிரயத்தனப்படவேண்டுமே யொழிய, இவ்விதம் அதைரியத்திற்கு இடங்கொடுப்பது புருஷத்தனமல்ல." என்று சொல்லிக்கொண்டே கோபாலனுக்கெதிரில் உட்கார்ந்துகொண்டான். உடனே அவனுடைய பார்வை மேஜையின் மீதிருந்த கடிதத்தின்மேல் விழுந்தது.

**கோபாலன்** :—"ஹே தெய்வமே! நான் என்ன செய்வேன்?—"



**கணபதி** :—"அசடே! [illegible]தைரியமாயிரு. ஆமாம்; [illegible]பொழுது கங்காதரன் எங்[illegible]"

**கோபாலன்** :—"எனக்குத் தெரியாது."

**கணபதி** :—"இதுவரையில் போலீஸார் இங்கு வரவில்லையோ?"

**கோபாலன்** :—"வந்து இவ்வீடுமுழுமையும் சோதனை செய்தார்கள். அவர்கள் சென்று இப்பொழுதுதான் கால் மணி இருக்கும்."

**கணபதி** :—"அப்படியா? சரி. கங்காதரன் இவ்விதம் ஓடி ஒளிந்துகொள்வது மிகவும் பிசகு. இது பிறகு அவனையே பாதிக்கும். ஆனால்— ஆஹா! இதென்ன கடிதம்? கங்காதரனுடைய கையெழுத்தைப் போலிருக்கிறதே."

கோபாலன், அதுவரையில் அக் கடிதத்தை மறந்து உட்கார்ந்துகொண்டிருந்தவன்போலத் திடுக்கிட்டவனாய், அதை அவசரத்துடன் எடுத்து தன் சட்டைப்பைக்குள் வைத்துக்கொண்டு, தடுமாற்றத்துடன், "இக் கடிதம் நீ பார்க்கக்கூடியதல்ல." என்றான். உடனே, கணபதி,

"அடே! அதை நான் ஏற்கனவே வாசித்துவிட்டேன்." என்று கூறவே, கோபாலனுடைய முகம் மேலும் வெளுத்தது. அவன், பதறிய மனதுடன்,

"கணபதி! நீ இவ்விதம் திருட்டுத்தனமாய் அதை வாசிப்பாயென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. சரி; இப்பொழுது நீ என்ன செய்யப்போகிறாய்?" என்று சொல்லொணா கவலையுடனும் ஆவலுடனும் வினவ, கணபதி,

"கோபாலா! இங்கே பார். நான் சொல்வதை வித்தியாஸமாக எடுத்துக்கொள்ளாதே. கங்காதரன் அக் கடிதத்தில் தான் சென்று ஒளிந்துகொள்ளப்போகும் இடம் எங்கேயென்று எழுதியிருக்கிறான். அவன் இவ்விதம் போலீஸாரை ஏமாற்ற நினைப்பது மிகவும் பிசகு. அவன்

வாஸ்த[illegible]த்தில் நிரபராதியாயி[illegible]தால், போலீஸார் அவனைக் கண்டுபி[illegible]செய்யுமுன், அவனே போலீஸாரிடம் சென்று வாஸ்தவத்தில் நடந்ததை ஒப்புக்கொள்ள வேண்டும். அவன் அப்படியே இக் கொலையைச் செய்திருப்பானாகில், உன் சகோதரனாயிருந்தபோதிலும், நீ அவனை சட்டத்திற்கு விரோதமாய் இவ்விதம் தப்பித்துக் கொள்வதற்கு இடங்கொடுப்பது மிகவும் அபாயகரமான கார்யம். ஆகவே, நீ உடனே இக் கடிதத்தை போலீஸாரிடம் கொடுத்துவிடவேண்டும்." என்று கூறவே, கோபாலன், பிரமித்து வாயைத் திறந்து பேசவும் சக்தியற்றவனாய், கொஞ்சநேரம் கணபதியை உற்றுநோக்கியவண்ணமிருந்தான். பிறகு, அவன், பரிதாபகரமான குரலில்,

"கணபதி ! நீ இப்படிப் பேசுவாயென்று நான் நம்பவே இல்லை. ஏண்டா ! நாமே அவனைப் போலீஸாரிடம் காட்டிக் கொடுக்கலாமா ? நீ என்னை பரிஹஸிக்கிறாயென்று தோன்றுகிறது." என்றான்.

கணபதி :—"நான் பரிஹஸிக்கவில்லை. இதுவரையில் நான் என் மனச்சாக்ஷிக்கு விரோதமான கார்யம் ஒன்றும் செய்தது கிடையாது. ஆகவே, இக் கடிதத்தைப் பார்த்தபிறகு நான் சும்மாயிருக்கமுடியாது. ஆனால் நாம் உடனே இக் கடிதத்தைப் போலீஸாரிடம் கொடுக்கவேண்டாம். முதலில் நீயும் நானும் சென்று, கங்காதரனை நேரில் கண்டு, உள்ளதை ஒப்புக்கொள்ளுமாறு அவனைக் கேட்டுக்கொள்வோம். அவன் மறுப்பானாகில்— "

கோபாலன் :—(கவலையுடன்) "மறுப்பானாகில் நீ என்ன செய்யப்போகிறாய் ?"

கணபதி :—"மறுப்பானாகில், நாமே அவனைப் போலீஸார் வசம் ஒப்புவித்துவிடவேண்டும்."

இதைக் கேட்டதும், கோபாலன், அடக்க இயலாத கோபத்துடன்,



"அடே! என்னை என்ன உணர்ச்சியற்ற மிருகமென்று நினைத்துவிட்டாயோ ? நீ சொல்லுகிறபடி செய்ய நான் தயாராயில்லை." என்று கூறவே, கணபதி,

"சரி; அப்படியானால் நான் செய்யவேண்டியதை—" என்று பேசிக்கொண்டே இருந்தவன், திடீரென்று கோபாலன்மீது பாய்ந்து, அவன் சட்டைப்பையிலிருந்த அக் கடிதத்தை பலாத்காரமாய் எடுத்துக்கொண்டு, "சரி ; இதோ சென்று இதை போலீஸாரிடம் கொடுத்துவிடுகிறேன்." என்று தீர்மானத்துடன் கூறினான். கோபாலன், பயத்தினால் கால்கள் நடுங்க, மனம் பதற, தன் இரு கரங்களையும் கூப்பிக்கொண்டு,

"கணபதி ! வேண்டாம். தயவுசெய்து என் தம்பியைக் காப்பாற்று." என்று கல்லும் கரையத்தக்கவிதம் கெஞ்சினான். ஆனால், கணபதி,

"அவனை நான் எப்படிக் காப்பாற்றமுடியும் ? அவன் வாஸ்தவத்தில் நிரபராதியாயிருந்தால் தெய்வம் அவனை அவசியம் காப்பாற்றும். கோபாலா ! என்னை வித்தியாஸமாக நினைக்காமலிருக்குமாறு உன்னை மறுபடியும் வேண்டிக்கொள்ளுகிறேன். நான் இவ்விதம் பேசுவதற்குக் காரணம் உன் தம்பியிடம் எனக்குள்ள பிரியமேயொழிய வேறல்ல. அவன் நிரபராதியென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். அவன் சிறுபிள்ளைத்தனமாய் பயந்து ஓடி ஒளிந்துகொள்ளத் தீர்மானித்துவிட்டான். கோபாலா ! போலீஸாரை ஏமாற்றுவது லேசான கார்யமா ? அவர்கள் சீக்கிரம் அவனைக் கண்டுபிடித்து கைது செய்துவிடுவார்களென்பது திண்ணம். பிறகு நாம் எப்பேர்ப்பட்ட வக்கீலை வைத்தபோதிலும், அவன் முன்யோசனையில்லாமல் செய்த கார்யத்தின் பலனாய் அவனை நிரபராதியென்று ரூபிப்பது முடியாதகார்யமாய்விடும். ஏற்கனவே சந்தர்ப்ப சாக்ஷியங்கள் மிகவும் பயங்கரமாயிருக்கின்றன—" என்று அவன் மேலே பேசுமுன், கோபாலன் வீட்டு கார்யஸ்தர் ராமானுஜய்யங்கார் அவ்வறைக்குள் நுழையவே, கணபதி, கோபாலனை நோக்கி,

"சரி; நான் போய்விட்டு கால்மணி நேரத்திற்குள் வருகிறேன். நீ அதற்குள் புறப்படத் தயாராயிரு." என்று கூறிவிட்டு கீழே ஓடினான்.

நிற்க, உள்ளே நுழைந்த ராமானுஜய்யங்கார், அவசரத்துடன்,

"கோபாலா! வா; எனக்கு உடனே உன்னிடம் கொஞ்சம் தனிமையில் பேசவேண்டும்." என்று கூறியவண்ணம், அவ் வாலிபனுடைய வலது கரத்தைப் பிடித்து இழுத்துக்கொண்டு, பக்கத்திலிருந்த ஒரு அறைக்குச் சென்றார்.

கால்மணி நேரத்திற்கெல்லாம், கணபதி, மறுபடியும் ஓடிவந்து,

"கோபாலா! கோபாலா!!" என்று அழைக்கவே, கோபாலன் வெளியே வந்தான். அவனைக் கண்டதும், கணபதி, அவசரத்துடன்,

"வா வா; நாழியாய்விட்டது." என்று கூறவே, கோபாலன், என்ன செய்வதென்று புரியாமல் தயங்கியவாறு, பரிதாபகரமான பார்வையுடன் ராமானுஜய்யங்காரை நோக்கவே, அவர்,

"என்ன செய்கிறது? மாட்டிக்கொண்டுவிட்டோம்; போய்விட்டுவா. நான் சொன்னது ஞாபகமிருக்கட்டும்." என்றார். உடனே, அவன் கணபதியுடன் கீழே சென்றான். கீழே வந்ததும், கணபதி,

"வாசலில் ஒரு போலீஸ்காரன் நின்றுகொண்டிருக்கிறான். வா; கொல்லை வழியாய்ப் போவோம்." என்றான்.

---

## அத்தியாயம் 3.

அதே இரவு சுமார் 9½ மணிக்கு, தனபுரியில் நடந்த ஒரு ஸம்பவத்தை இப்பொழுது கவனிப்போம். அவ்வூர் தெற்குவீதியிலிருந்த ஒரு வீட்டின் வாசற்கதவு 'தடார் தடார்' என்று அவசரத்துடன் தட்டப்படும் சப்தம் கேட்கவே, அவ் வீட்டிற்குள் ஒரு அறையில் நாவல் ஒன்றை மிகவும் ஊக்கத்துடன் வாசித்துக்கொண்டிருந்த சுமார் 45 வயதுள்ள ஒருவர்,



"யாரடா அங்கே? முருகேசா! வாசற்கதவை யாரோ தட்டுகிறார்களே. உனக்கு காது கேட்கவில்லையா?" என்று உரத்த குரலில் வினவ, பக்கத்து அறையில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அவருடைய வேலைக்காரன் முருகேசன், எழுந்து, வாசற்கதவை நோக்கி ஓடினான். மறுநிமிஷம், அவன், தன் யஜமானரிடம் வந்து, மரியாதையுடன்,

"ஒரு பெண்பிள்ளை உங்களைப் பார்க்கவேண்டுமென்று சொல்லுகிறாள்." என்று கூறவே, அவனுடைய யஜமானர், வியப்புற்று,

"பெண்பிள்ளையா? யார் அது?" என்று வினவினார். முருகேசன்,

"அவளை நான் இதுவரையில் பார்த்தது கிடையாது." என்று விடையளிக்கவே, அவனுடைய யஜமானர்,

"சரி; உள்ளே அழைத்துக்கொண்டுவா." என்று உத்தரவிட்டார்.

சற்று நேரத்திற்கெல்லாம் முருகேசன் வெளியில் காத்துக்கொண்டிருந்த ஸ்திரீயை அழைத்துக்கொண்டு வரவே, அவர், மரியாதையுடன்,

"அம்மா! நீ யார்? உன்னை நான் இதுவரையில் பார்த்தில்லையே. உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்க, வந்தவள், வியக்கத்தக்க தைரியத்துடன்,

"கிருஷ்ணாஸ்வாமி நாயுடுவாள்! எனக்கு உடனே உங்களுடன் தனிமையில் பேசவேண்டும்." என்று கூறவே, நாயுடு, மேலும் வியப்புற்று, பக்கத்தில் நின்றுகொண்டிருந்த முருகேசனைப் போகச்சொல்லிவிட்டு, மறுபடியும் வந்தவளை நோக்கி, "அம்மா! ஆனால் உனக்கு என்னைத் தெரியுமோ?" என்று வினவினார்.

"தெரியும். இன்னும் உமக்கும் என்னை நன்றாய்த் தெரியும். இருங்கள் இதோ வந்துவிட்டேன்." என்று கூறியவண்ணம், அவ்வறையை உட்பக்கம் தாளிட்டுவிட்டு, "ஆமாம். இப்பொழுது இவ் வீட்டில் உம்மையும் முருகேசனையும் தவிர வேறு ஒருவரும் இல்லையோ?" என்று வினவ, கிருஷ்ணஸ்வாமி நாயுடு பிரமையுடன் 'இல்லை' என்பதற்கடையாளமாய் தன் தலையை ஆட்டினார். பிறகு, அவர்,

"அம்மா! நீ யார்? இதென்ன இது?" என்று மறுபடியும் வினவ, வந்தவள்,

"நான் அம்மாவுமில்லை; அக்காவுமில்லை; நானும் உம்மைப்போல் ஒரு புருஷனே. இதோ பாரும்." என்று கூறிக்கொண்டே, தான் உடுத்திக்கொண்டிருந்த விலையுயர்ந்த புடைவையை அவசரத்துடன் அவிழ்க்கவே, நம் நாயுடு தன்னை அறியாமலே தன் கண்களை இறுக மூடிக்கொண்டார். அவர் மறுபடியும் தன் கண்களைத் திறந்து பார்த்த பொழுது அவர் எதிரில் நின்றது ஸரஸ்வதியின் காதலன் கங்காதரனேயொழிய வேறல்ல. அவனைக் கண்டதும், கிருஷ்ணஸ்வாமி நாயுடு, தன் நாற்காலியிலிருந்து ஒரே தாவலாய்த் தாவி, கங்காதரனுடைய கரங்களைப்பற்றிக்கொண்டு,

"நீ வக்கீல் கல்யாணராமய்யருடைய இரண்டாவது மகனல்லவோ? என்ன இது?" என்று வினவினார்.

கங்காதரனுடைய தந்தை கல்யாணராமய்யரும் கிருஷ்ணஸ்வாமி நாயுடுவும் சிறுவயதிலிருந்தே ஒரே பள்ளியில் வாசித்த இரு இணையற்ற தோழர்கள். கிருஷ்ணஸ்வாமி நாயுடு, அவருடைய 24வது வயதில், தன் பெற்றோர்களாலும் பந்துஜனங்களாலும் கைவிடப்பட்டு, சாப்பாட்டிற்கும் வழியின்றி, அச்சமயம் வஸந்தபுரியில் வக்கீலாயிருந்த தன் நண்பர் கல்யாணராமய்யரிடம் சென்று, தன் பரிதாபகரமான நிலைமையை எடுத்துச்சொல்லவே, கல்யாணராமய்யர், அவருக்கு ரூ 5000 கொடுத்து, வியாபாரம் செய்யுமாறு யுக்தி புகட்ட, நாயுடு தனபுரியில் வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். வரவர, அவருக்கு அதில் நல்ல லாபம்



கிடைத்தது. அதன் பலனாய், அவருக்கு தற்சமயம் கிட்டத்தட்ட 2 லக்ஷத்துக்கு ஐவேஜி உண்டு. அவர் தனபுரிக்கு வந்து வெகுகாலம் ஆய்விட்டதாலும், இன்னும் அவருடைய உதாரகுணம், பெருந்தன்மை, பொதுஜன நன்மைக்காக தன்னால் இயன்றவரையில் உழைக்கவேண்டுமென்ற ஆசை, இத்தகைய நற்குணங்களாலும், அவருக்கு அவ்வூரில் நல்ல மரியாதையும் செல்வாக்கும் உண்டு. கல்யாணராமய்யர் அவருக்கு ஆதியில் பணம் கொடுத்து உதவியதுமன்றி, அவர் வேறு ஜாதியைச் சேர்ந்தவராயிருந்தபோதிலும், அவரைத் தன் ஸகோதரனென்றே மதித்து, அதற்கேற்ற பிரியத்துடனும் மரியாதையுடனும் நடத்துவது வழக்கம். நாயுடுவும், அதேவிதம், கல்யாணராமய்யரிடம் அளவற்ற பிரியமும் வியக்கத்தக்க மரியாதையும் வைத்திருந்தார். பிறகு, கல்யாணராமய்யருடைய காலம் முடிந்தும், நாயுடு, வஸந்தபுரிக்கு போகும்பொழுதெல்லாம், அவருடைய மனைவியையும் புதல்வர்களையும் பார்க்காமல் வருவதில்லை.

கங்காதரன், தன் ஸ்திரீ வேஷத்தைக் கலைத்துவிட்டு,

"நாயுடுவாள்! நான் ஒரு பெரிய ஆபத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறேன். உமக்கு என் தந்தையிடம் எவ்வளவு பிரியமும் மரியாதையும் உண்டென்பது எனக்கு நன்றாய்த் தெரியுமாகையால், நாம் உம்மிடம் வந்தால் நீர் என்னைக் கைவிடமாட்டீரென்ற தைரியத்தினால் இங்கு வந்தேன்." என்று கூறவே, நாயுடு, பிரியத்துடன்,

"அப்பா! நீ பயப்படவேண்டாம். உன் தந்தையை உத்தேசித்து வேண்டுமானால் நான் என் உயிரையும் கொடுப்பேனென்பது ஸத்தியம். அதிருக்கட்டும். நீ சாப்பிட்டாய்விட்டதோ?" என்று வினவினார். கங்காதரன்,

"நான் சாப்பிட்டாய்விட்டது. முதலில் நான் மாட்டிக்கொண்டிருக்கும் ஆபத்தென்னவென்பதைச் சொல்கிறேன் கேளுங்கள். பிறகு உம்மிஷ்டப்படி செய்யலாம். நான் இன்று மாலை சுமார் 7 மணிக்கு, வஸந்தபுரி பட்டாபி

ஜோஸியர் தெருவிலிருந்த ஒருவனை கொலைசெய்துவிட்டேன்—" என்று அவன் மேலே பேசுமுன், நாயுடு, திடுக்கிட்டவராய்,

"என்ன? கொலையா?" என்று கூவினார். பிறகு தன் செவிகளையே நம்பாதவர்போல், பிரமையுடன் அவ்வாலிபனை நோக்கவே, கங்காதரன்,

"அது வாஸ்தவத்தில் கொலை இல்லை. தயவுசெய்து நான் பேசும்பொழுது குறுக்கே பேசாமலிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அந்த மனுஷ்யனுடைய தங்கையை நான் விவாஹம் செய்துகொள்ள ஆசைப்பட்டு, அடிக்கடி அவனுடைய வீட்டிற்குப் போவதுண்டு. ஆனால் அம் மனுஷ்யன் அப் பெண்ணை 55 வயதுள்ள ஒரு கிழவனுக்குக் கொடுக்கத் தீர்மானித்திருந்தானாகையால், நான் அவ்விதம் அடிக்கடி அவ் வீட்டிற்குப் போவதில் அவனுக்கு இஷ்டமில்லை. இக் காரணத்தால் இன்று மத்தியானம், எனக்கும் அவனுக்கும் அவனுடைய வீட்டில் வாக்குவாதம் நடந்தது. பிறகு அவனுடன் பேசுவது பிசகென நினைத்து நான் என் வீட்டிற்குப் போய்விட்டேன். அம் மனுஷ்யன் நான் வந்தபிறகு தன் தங்கையை வாயில் வந்தபடியெல்லாம் திட்டியதுமன்றி தான் அவளை அக் கிழவனுக்குத்தான் கொடுப்பதென்று நிச்சயித்துவிட்டதாகக் கூறவே, என்னைத் தவிர வேறு புருஷனை விவாஹம் செய்துகொள்ளுவதில்லையென்று தீர்மானித்திருந்த அப் பெண்மணி இன்று இரவே தற்கொலை செய்துகொள்ள நிச்சயித்தாள். ஆனால், சாகும் முன் என்னை ஒருதரம் பார்க்கப் பிரியப்பட்டு, அவள் தன்னை வந்து பார்க்குமாறு எனக்கு ஒரு கடிதம் எழுதி அனுப்பவே, நான் கவலையுடன் சுமார் 6½ மணிக்கு அவ் வீட்டிற்குச் சென்றேன். நான் போனபொழுது அவ் வீட்டில் ஒருவருமில்லை. ஆனால் நான் உள்ளே நுழைந்த ஐந்துநிமிஷ நேரத்திற்கெல்லாம் அப்பெண்ணின் தமயன் உள்ளே நுழைந்து, என்னைக் கண்டதும், மறுபடியும் திட்டவாரம்பித்ததுமன்றி, என்னை அடிக்கவும் ஆரம்பித்தான். இதன் பலனாய் நாங்கள் இருவரும் அவ் வீட்



டின் கூடத்தில் யுத்தம் செய்ய நேரிட்டது. அச்சமயம், அவன், பக்கத்திலிருந்த ஒரு மித்தத்தின் ஓரத்திலிருந்ததால், நடுவில் தவறி கீழே விழவே, அம் மித்தத்திலிருந்த ஒரு அம்மியில் அவனுடைய மண்டை அடிபட்டது. அடி பலமாய்ப் பட்டுவிட்டதால் அவன் உடனே இறந்துவிட்டான். இது சட்டப்பிரகாரம் கொலையாகாது. ஆனாலும் நான் போலீஸாரிடம் மாட்டிக்கொண்டால் பல வருஷகாலம் சிறைச்சாலையில் இருக்கவேண்டிவரும். அதில் எனக்கு இஷ்டமில்லை. ஆகவே, எங்கேயாவது ஓடி ஒளிந்துகொள்ள நிச்சயித்தேன். நீங்கள் தயவுசெய்து என்னை சில நாட்கள் பிறர் பார்க்கவழியின்றி உங்களுடைய வீட்டில் வைத்துக்கொள்வீர்களாகில், பிறகு நான் வேண்டிய ஏற்பாட்டைச் செய்துகொள்ளுகிறேன்." என்றான்.

இதைக் கேட்டதும், கிருஷ்ணஸ்வாமி நாயுடு, தன் வாயைத் திறந்து பேசவும் சக்தியற்றவர்போல், கொஞ்ச நேரம் மௌனமாயிருந்துவிட்டு, பிறகு,

"அப்பா! எனக்கு ஒன்றும் புரியவே இல்லை ஆனால் நீ எதற்கும் பயப்படவேண்டாம். எவ்வளவு காலம் வேண்டுமானாலும், நான் உன்னை என் வீட்டில் வைத்துக்கொள்ளுகிறேன். இன்னும் நீ என் வீட்டில் இருக்கும்வரையில் உன்னை ஒருவனாலும் பிடிக்கமுடியாது. சரி; இருக்கட்டும். நீ இவ்விதம் என் வீட்டிற்கு வருகிறாயென்பது யாருக்காவது தெரியுமோ?" என்று வினவ, கங்காதரன்,

"என் தமயனுக்குமட்டும் தெரியும்." என்று விடையளித்தான்.

நாயுடு:—"ஆமாம்! நீ இவ்வளவு சாமார்த்தியத்துடன் ஸ்திரீ வேஷம் அணிந்துகொண்டு வந்தது மிகவும் வியக்கத்தக்க கார்யம். ஆமாம்; உனக்கு இந்தப் புடவை, ரவிக்கை இவைகளெல்லாம் எங்கிருந்து அகப்பட்டன?"

கங்காதரன்:—"வஸந்தபுரியில் சில படித்த வாலிபர்கள் சேர்ந்துகொண்டு 'சுந்தரவிலாஸ ஸபா' என்று ஒரு நாடக—"

188778



நாயுடு :—" ஆ[illegible] எனக்குத் தெ[illegible]யும்."

கங்காதரன் :—" அந்த ஸபையில் நான்தான் ஸ்திரீவேஷம் போட்டுக்கொள்ளுவது வழக்கம். அதுவுமன்றி, அந்த ஸபைக்கு நானே காரியதரிசியாகையால் அதற்கு சொந்தமான உடுப்புகள் முதலிய சாமான்களிருக்கும் வீட்டின் சாவி எப்பொழுதும் என்னிடந்தான் இருக்கும்."

நாயுடு :—" சரிதான். ஆமாம்; நீ என்ன மோட்டாரில் வந்தாயோ ? "

கங்காதரன் :—" ஆம். "

நாயுடு :—" அப்பா ! உன் நிலைமையை நினைக்கும்பொழுது எனக்கு மிகவும் விசனமாயிருக்கிறது. நீ இப்படி எவ்வளவு காலம் ஒளிந்துகொண்டிருக்கமுடியும்? "

கங்காதரன் :—" அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். கூடிய சீக்கிரம் நான் வெளியூர் போக உத்தேசித்திருக்கிறேன். அங்கு சென்றதும் வேறு பெயருடன் என் படிப்பைக் கொண்டு ஒரு உத்தியோகம் சம்பாதித்துவிடுவேன்.

நாயுடு :—" அப்பா! நீ போகுமிடத்தில் யாராவது உன்னை அடையாளம் கண்டுபிடித்து— "

கங்காதரன் :—" நாயுடுவாள் ! அதைப்பற்றி எனக்குக் கவலையே இல்லை. ஆனால்— " என்று மேலே பேசுமுன்,

அவ் வீட்டின் வாசற்கதவு ' தடார் தடார் ' என்று தட்டப்படவே, அவ்விருவரும் திடுக்கிட்டவர்களாய் எழுந்து நின்றார்கள். நாயுடு, பக்கத்திலிருந்த ஒரு அறையைக் காண்பித்து தாழ்ந்த குரலில் அவசரத்துடன், " நீ அந்த அறைக்குள் சென்று மறுபடியும் உன் வேஷத்தை அணிந்துகொள். அவ்வறையிலிருந்து வீதிக்குச் செல்ல ஒருவழி இருக்கிறது. நான் வந்திருப்பவர்களுடன் பேசும்பொழுது கணக்கும்பக்ஷத்தில் வெளியே போய்விடு." என்று கூறிவிட்டு, வெளியே சென்றார். பக்கத்திலிருந்த மற்றொரு